1995 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், தனியார்கள் இறால் பண்ணை வைப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இதுகுறித்து நானும் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் அந்த மாவட்டத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், அங்கே இறால் வளர்ப்பவர்களையும் அழைத்துப் பேசினோம். அவர்களுக்கு அரசு நிலங்களில் அவற்றை வைக்க அனுமதி கொடுக்கவில்லை. ஆனால், தனியாரிடத்திலே வாங்கி அவர்கள் தொழில் செய்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற அரசியல் சட்டப்படி இந்த நாட்டினுடைய குடிமகன், இந்தியாவில், காஷ்மீரை விட்டுவிட்டு, மற்ற இடங்களில் நிலத்தை வாங்கவோ, விற்கவோ, தொழில் செய்வதற்கோ அனுமதி இருக்கிறது. இந்த அரசோ, அல்லது வேறு எந்த அரசோ அதைக் கட்டுப்படுத்த முடியாது. அந்த முறையில் பல மாவட்டத்துக்காரர்கள் அங்கே வந்து நிலத்தை வாங்கி, இறால் பண்ணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு செய்வது கூடாது என்று அதனைத் தடுப்பதற்கு நாங்கள் எல்லோரும் பேசி, அந்தமாதிரி செய்வதால், இருக்கிற விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் என்பதால், தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னோம். அதற்குப் பிறகு, இறால் பண்ணை வைக்க வேண்டுமென்றால், அதைத் தடுப்பதற்குப் பூரண அதிகாரம் இந்த அரசுக்கு இல்லை. ஆனால், அதை ஒழுங்குப்படுத்துகிற அதிகாரம்தான் இந்த அரசுக்கு உண்டு. இதை முறைப்படுத்துகிற அதிகாரம் தான் இந்த அரசுக்கு உண்டு. இதை முறைப்படுத்த வேண்டும்; ஒழுங்குப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு சட்டமுன்வடிவு இங்கே கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன்படி, அந்தச் சட்டமுன்வடிவின்படி, கட்டுப்பாடு விதிக்கிறபோது, யாருக்கும் பாதிப்பு வராது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இதன்மீது, இறால் பண்ணை வைத்திருப்பவர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். அதுகுறித்து இங்கே விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியும் காயிதே மில்லத் மாவட்டத்தில் இருக்கிற ஏழை விவசாயிகள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், ½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், குத்தகைக்கு இருப்பவர்கள்–பெரும்பாலும் குத்தகைக்கு இருப்பவர்கள்–ஆதிதிராவிடர் மக்கள், அவர்களுக்கெல்லாம் எந்தப் பாதிப்பும் வராதபடி, இந்த அரசு அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) உதகை அரசினர் கலைக்கல்லூரி மாணவர்கள் போராட்டம் குறித்து

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு சிறப்புக் கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். உதகமண்டலத்திலுள்ள அரசினர் கலைக் கல்லூரியைப் பற்றிய பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதிக்கிறேன்.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அனுமதித்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள அரசு கலைக் கல்லூரி 1955–ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, கடந்த 40 ஆண்டுகாலமாக சீரும் சிறப்புமாக செயல்பட்டு வருகிறது. தற்பொழுது 1340 மாணவர்களும் 650 மாணவியர்களும் பயின்று வருகிறார்கள். கடந்த சில வாரங்களாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும், முதல்வருக்கும் சரியான ஒத்துழைப்பு இல்லை என்ற குறைபாடு இருந்துவருகிறது. இதற்காக மாணவர்கள் 4 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். வருடாந்திர மாணவர் பேரவைத் தேர்தலுக்குப் பின்பு இதுவரையில் ஆரம்ப விழா நடைபெற முதல்வர் அனுமதி வழங்கவில்லை என்றும், காவல் துறையினர் வகுப்புகள் நடைபெறும்பொழுது கல்லூரி வளாகத்திற்குள் வருவதற்கு அனுமதி தரக்கூடாது என்றும், கல்லூரியை விட்டு இடைநீக்கம் செய்யப்பட்ட ஐந்து மாணவர்களை உடனடியாக அவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு அனுமதிக்கும் வகையில் இடைநீக்கத்தை ரத்து செய்ய வேண்டியும், மேற்படி ஐந்து மாணவர்கள் மீது காவல் துறையினருக்கு முதல்வர் கொடுத்த புகாரைத் திரும்பப் பெறவேண்டும் என்றும் கடந்த ஐந்து வாரங்களாக மாணவ, மாணவியர் வகுப்புகளை புறக்கணித்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். இச்சூழ்நிலையில் 17–11–95 முதல் தேர்வுகள் நடைபெற இருப்பதால் சுமார் 2,000 மாணவ, மாணவியருடைய எதிர்காலம் பாதிப்பு அடையும் வாய்ப்பு உள்ளது. ஆகவே மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த முக்கியமான பிரச்சினையில் தலையிட்டு கல்லூரி சுமூகமாக நடைபெற வழிவகை செய்ய முற்படுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.